FIRST INFORMATION REPORT

Under Secuon 173 BNSS முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(குற்ற வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8069054

1. District : The Nilgiris PS: V & AC Year: 2025 FIR No.: 4 Date: 16.10.2025
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: PC Act, 1988 as Sections பிரிவுகள்: 7

(ii) Act சட்டம்: amended by PC Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : Prior to 15.10.2025
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

Time Period : Time from : Time to : at 15.30 hrs.
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 16.10.2025 Time : 10.00 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Time
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 16.10.2025 நேரம் 10.00 hrs.

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Tamil Typed complaint.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் South Forest Range Office

Beat Number : (b) Address : Udhagamandalam
முறைக் காவல் எண் முகவரி at about 2 km W

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. K. Sivakumar (b) Father's/ Husband's Name :
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : (d) Nationality : (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : Special (g) Address :
தொழில் District Inspection Cell Office, Udhagamandalam. முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) Tr. D. Krishnakumar, Forest Range Officer, South Forest Range, Nilgiris Division.

2) Tr. V. Gopalakrishnan, Forester, South Range Office, Nilgiris Divisi

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Enclosed Form. 91 dt: 16.10.2025

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the Investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் தகவல் குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

16/10/2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

16-10-2025

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

16.10.2025, 11.15 hrs.

Name: பெயர் G. Shanmugaradeva
Rank: நிலை .....No. எண் .....
Inspector of Police,
V & AC, the Nilgiris.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நீலகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.4/2025/AC/NI, u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-

இன்று 16.10.2025-ம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு நீலகிரி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் G.சண்முகவடிவு ஆகிய நான் அலுவலகத்தில் இருக்கும்போது நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தலைமை பொறுப்பாளர் (பொது) பொறுப்பு மாவட்ட சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர், திரு.K.சிவக்குமார் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று நீலகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.4/2025, u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 21018 கீழ் வழக்கு பதிவு செய்தேன். அந்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் K.சிவகுமார், தலைமை பொறுப்பாளர் (பொது), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், உதகமண்டலம்/ சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், நீலகிரி மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நீலகிரி. அம்மையீர், பொருள்: திடீர் சோதனை - நீலகிரி வனக்கோட்டம், தெற்கு வனச்சரக அலுவலகம், உதகமண்டலம் - நடவடிக்கை எடுக்க கோருதல் - தொடர்பாக. நான் நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் தலைமை பொறுப்பாளர் (பொது) ஆக பணிபுரிந்து வருகிறேன். நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவு ந.க.எண்.A1/Pdl/30/2025, நாள்:15.10.2025-ன்படி சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலராக நியமிக்கப்பட்ட எனக்கு நீலகிரி வனக்கோட்டம், தெற்கு வனச்சரக அலுவலகத்தில் வனச்சரக அலுவலராக பணிபுரியும் திரு.D.கிருஷ்ணகுமார் மற்றும் அலுவலர்கள் வருகின்ற தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஒப்பந்ததாரர்களிடம் பணம் கையூட்டாக கேட்டுப் பெறுவதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில், நானும், திருமதி.G.சண்முகவடிவு, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும்

கண்காணிப்பு பிரிவு நீலகிரி மற்றும் காவல் குழுவினருடன் தெற்கு வனச்சரக அலுவலகத்தை 15.30 மணிமுதல் 21.00 மணிவரை திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. தெற்கு வனச்சரக அலுவலகம் முகாமுடன் சேர்ந்து உள்ளது. தெற்கு வனச்சரக அலுவலகத்திற்கு சென்றபோது வனச்சரக அலுவலர் அலுவலகத்தில் இல்லை. அலுவலகத்தில் இருந்த இளநிலை உதவியாளர் திருமதி.நித்யகலாவிடம் வனச்சரக அலுவலரை பற்றி விசாரிக்க அவர் முகாம் அலுவலகத்தில் இருப்பதாக தெரிவித்தார். தெற்கு வனச்சரக அலுவலருக்கு தகவல் சொல்லி அலுவலகத்திற்கு வரவழைத்து அவரிடம் அடையாள அட்டைகளை காண்பித்து என்னையும், காவல் ஆய்வாளர் திருமதி.G.சண்முகவடிவு அவர்களையும் மற்றும் காவல் குழுவினரையும் அறிமுகம் செய்துகொண்டு தெற்கு வனச்சரக அலுவலகத்தை திடீர் சோதனை செய்ய வந்திருக்கும் விவரம் தெரிவிக்கப்பட்டது. பின்னர் திரு.கிருஷ்ணகுமார் அவர்களது அறையில் வைத்து அவரிடம் விசாரிக்க தான் 11.04.2023-ம் தேதி முதல் உதகை தெற்கு வனச்சரக அலுவலராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்தபோது தனது பேண்டின் வலதுபக்க பின்பாக்கெட்டிலிருந்த மணி பர்ஸை எடுத்து ஆஜர் செய்தார். அதில் பணம் ரூ.11,800/- இருந்தது. அந்த பணத்தைப்பற்றி கேட்க, அவர் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ளதக்க வகையில் இல்லாததால், அந்த பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் அவரிடம் வேறு பணம் எதுவும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, அவர் தனது முகாம் அலுவலகத்தில் பணம் இருப்பதாக தெரிவித்து சில்வரில் S என்ற குறியீடு கொண்ட மெரூன் நிற லெதர் பேக்கை எடுத்து வந்து ஆஜர் செய்தார். அந்த பேக்கில் நான்கு அறைகள் இருந்தது. முதல் அறையில் 500 ரூபாய் தாள்கள் 40 எண்ணிக்கையில் ரூ.20,000/- இருந்தது. 2-வது அறையில் ஓம் என்ற டாலருடன் கூடிய சுமார் 1½ சவரன் எடையுள்ள தங்க செயின் இருந்தது. அது குறித்து திரு.கிருஷ்ணகுமார் அவர்களிடம் கேட்டபோது, 2024-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தனது மகன் விஷாகப்பிரியன் பிறந்தபோது மனைவியின் வீட்டிலிருந்து வாங்கி கொடுத்ததாக தெரிவித்தார். அவரது முகாம் அலுவலகத்தில் லாக்கர் எதுவும் இல்லாததால், உபயோகப்படுத்தும் நேரம் தவிர மற்ற நேரத்தில் அந்த பேக்கில்

வைத்திருப்பதாக தெரிவித்தார். அதனால் அந்த தங்க செயின் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. 3-வது அறையில் 500 ரூபாய் தாள்கள் 7 கட்டுகளில் 100 எண்ணிக்கையிலும், 2 கட்டுகளில் தலா 90 எண்ணிக்கையிலும் மொத்தம் ரூ.4,40,000/- இருந்தது. மேலும் 200 ரூபாய் தாள்கள் 70 எண்ணிக்கையில் ரூ.14,000/- இருந்தது. 4-வது அறையில் 500 ரூபாய் தாள்கள் 69 எண்ணிக்கையிலும் 100 ரூபாய் தாள்கள் 5 எண்ணிக்கையிலும் மொத்தம் ரூ.35,000/- இருந்தது. பின்னர் மெரூன் நிற லெதர் பேக்கில் இருந்த மொத்த பணம் ரூ.5,09,000/- குறித்து வனச்சரக அலுவலர் திரு.கிருஷ்ணகுமார் அவர்களிடம் கேட்க சூழல் சுற்றுலா மையத்திற்கு (ECO Tourism Development) வளர்ச்சி பணிகளுக்கு செலவு செய்த தொகைக்கு செலவினங்களின் பட்டியல் மாவட்ட வன அலுவலர் அலுவலகத்தில் சமர்ப்பித்து, செலவு செய்த தொகையை திரும்ப பெற்ற பணம் என்று கூறினார். அவர் சொன்ன விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாததாலும், ஒப்பந்ததாரர்களிடமிருந்து கையூட்டாக பெற்ற பணமாக இருக்கக்கூடும் என்பதாலும் பணம் ரூ.5,09,000/- மற்றும் மெரூன் நிற பேக் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அந்த சமயத்தில் அலுவலகத்திற்கு வந்த வனவர் திரு.V.கோபாலகிருஷ்ணன் என்பவரை விசாரிக்க தான் 05.09.2024-ம் தேதி முதல் வனவராக தெற்கு வனச்சரக அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாகவும், மதிய உணவிற்கு சென்றுவிட்டு வருவதாக தெரிவித்தார். பின்னர் அவரை சோதனை செய்தபோது, தனது சட்டையின் வலது பக்க மேல் பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.12,000/-, சட்டையின் இடது பக்க மேல் பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.5,000/-, ஜெர்கின் வலதுபக்க பாக்கெட்டிலிருந்து ரூ.600/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் குறித்து அவரிடம் கேட்க, அவர் சொன்ன விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாததாலும், கையூட்டாக பெறப்பட்ட பணமாக இருக்கக்கூடும் என்பதாலும் அவரிடமிருந்த பணம் ரூ.17,600/-ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் இளநிலை உதவியாளர் திருமதி.G.நித்யகலா என்பவரை விசாரிக்க தான் 18.07.2024-ம் தேதி முதல் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்தபோது தனது ஹேண்ட் பேக்கிலிருந்து பணம் ரூ.1,250/- எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம்

குறித்து அவரிடம் கேட்க, திருமதி.R.ஜெயந்தி, ஆல்பா டிரேடிங் கம்பெனி, சின்ன வேடம்பட்டி போஸ்ட், கோயம்புத்தூர் என்பவருக்கு 10.10.2025-ம் தேதி Red Gum Firewood, Blue Gum Timber, Red Gum Timber, Pulpwood, Cypress Timber ஆகியவற்றை லாரன்ஸ் பள்ளியிலிருந்து ஏற்றிச்செல்வதற்கான 11 அனுமதி சீட்டு வழங்கியதற்கான கட்டணம் ரூ.550/- என்றும், 14.10.2025-ம் தேதியன்று சங்கரன், த/பெ லிங்கன், கவர்னர் சோலா கிராமம், குருத்துக்குளி அஞ்சல், நீலகிரி மாவட்டம் என்பவர்மீது பதிவு செய்யப்பட்ட வனச்சரக குற்ற எண்.56/2025 வழக்கிற்கான முழு இணக்க கட்டணம் ரூ.300/- என்றும் கூறி உதகை தெற்குச்சரகம், வனச்சரக அலுவலக ரொக்க விற்பணை ரசீது புத்தகத்தை எடுத்து ஆஜர் செய்து ரசீது எண்.076391 மற்றும் 076392-ஐ காண்பித்து 10.10.2025-ம் தேதி ரூ.550/- மற்றும் 15.10.2025-ம் தேதி ரூ.300/- வசூல் செய்யப்பட்டுள்ள விவரத்தை தெரிவித்து, உதகை தெற்கு வனச்சரகம் பல இன கணக்கு புத்தகத்தில் அதற்கான பதிவுகள் செய்திருப்பதாக கூறினார். மேலும் அவலாஞ்சி வன ஓய்வு விடுதியை வாடகைக்கு கொடுத்ததற்காக வசூல் செய்த கட்டணம் ரூ.400/- என்றும் தெரிவித்தார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இருந்ததால், அந்த பணம் ரூ.1,250/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் திரு.D.கிருஷ்ணகுமார் அவர்களை அழைத்துக்கொண்டு அலுவலக வளாகத்தில் நின்றுக்கொண்டிருந்த வாகனங்களை சோதனை செய்தபோது TN 43 G-0903 வாகனத்தில் 78 பட்டாசு பெட்டிகள் இருந்தன. அது குறித்து திரு.D.கிருஷ்ணகுமார் அவர்களிடம் விசாரித்தபோது, சூழல் சுற்றுலா குழுவில் இருக்கும் பணியாளர்களுக்கு தீபாவளி பண்டிகை முன்னிட்டு ஊக்கப்பரிசு வழங்குவதற்காக வடக்கு வனச்சர அலுவலகத்தில் 14.10.2025-ம் தேதி கையொப்பம் செய்து வாங்கி வைத்திருப்பதாக தெரிவித்தார். அதனால், காவல் ஆய்வாளர் நீலகிரி மாவட்ட வன அலுவலர் திரு.S.கௌதம் அவர்களை 90034 25777 எண்ணில் 19.45 மணிக்கு தொடர்புகொண்டு விவரம் கேட்டபோது, வருடாவருடம் வனத்துறையிலிருந்து சூழல் சுற்றுலா குழு உறுப்பினர்களுக்கு வழங்குவது வழக்கம் என்றும், அதற்கான ரசீதை அனுப்பி வைப்பதாக தெரிவித்ததால், பட்டாசு பெட்டிகள்

கைப்பற்றப்படவில்லை. திடீர் சோதனையின்போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.5,38,400/-, சில்வரில் S என்ற குறியீடு கொண்ட மெரூன் கலர் லெதர் பேக் மற்றும் சான்றொப்பமிட்ட 1) உதகை தெற்கு வனச்சரகம் பல இன கணக்கு புத்தக (பக்கம் 378), 2) ரொக்க விற்பண ரசீது புத்தக நகல் (ரசீது எண்.076391, 076392), 3) 12.10.2025-ம் தேதி அவலாஞ்சி வன ஓய்வு விடுதியின் வாடகை கட்டண விவரம், 4) அமைச்சு பணியாளர் வருவகை பதிவேடு, 5) அவலாஞ்சி ETMC வருகை பதிவேடு மற்றும் 6) கேர்ன்ஹில் ETMC வருகை பதிவேடு மற்றும் திடீர் சோதனை செயல்முறை ஆகியவற்றை இத்துடன் இணைத்துள்ளேன். சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். ஒப்பம் K.சிவகுமார் உதகமண்டலம், 16.10.2025. Submitted: I have received a complaint from Tr.K.Sivakumar, Husur Sarishtadar (General), In-charge Special District Inspection Cell Officer, District Collectorate, Udhagamandalam, the Nilgiris on 16.10.2025 at 10.00 hrs and registered a case in Nilgiris Vigilance and Anti-Corruption Cr.No.4/2025 u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 ஒப்பம் G.சண்முகவடிவு 16.10.2025 Inspector of Police, Vigilance and Anti-Corruption, The Nilgiris.

Original FIR along with original written complaint of Tr.K.Sivakumar, Husur Sarishtadar (General), In-charge Special District Inspection Cell Officer, District Collectorate, Udhagamandalam, the Nilgiris is submitted to the Hon'ble Principal District and Sessions Judge, Principal District and Sessions Court, Udhagamandalam and copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

16-10-2025

(G.SHANMUGAVADIVU)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
The Nilgiris.